# இயல் : 3

## 3.4 : சொற்றொடர் அமைப்பு முறை

### மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

Question 1.
எழுவாய் எப்போதும் .................. லாகவே இருக்கும்.
அ) வினைச்சொல்
ஆ) இடைச்சொல்
இ) பெயர்ச்சொல்
ஈ) உரிச்சொல்
Answer:
இ) பெயர்ச்சொல்

Question 2.
பாடல் பாடினாள் - இத்தொடரில் .................. இல்லை .
அ) எழுவாய்
ஆ) பயனிலை
இ) செயப்படுபொருள்
ஈ) சொல்
Answer:
அ) எழுவாய்

Question 3.
அமுதன் ஓடினான் - இத்தொடரில் .................. இல்லை .
அ) பயனிலை
ஆ) செயப்படுபொருள்
இ) இடைச்சொல்
ஈ) உரிச்சொல்

Answer:
ஆ) செயப்படுபொருள்

## ஆ. எழுவாய், செயப்படுபொருள், பயனிலைகளை எடுத்து எழுதுக.

1. மாதவி சித்திரம் தீட்டினாள்.
2. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
3. அன்பழகன் மிதிவண்டி ஓட்டினான்.
4. கிளி பழம் தின்றது.

| வ.எண் | எழுவாய் (யார், எது, எவை, யாவர்) | செயப்படுபொருள் (யாரை, எதனை, எவற்றை) | பயனிலை (முடிந்த செயல்) |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

Asnwer:

| வ.எண். | எழுவாய் (யார், எது, எவை, யார்) | செயப்படுபொருள் (யார், எதனை, எவற்றை) | பயனிலை (முடிந்த செயல்) |
|---|---|---|---|
| 1 | மாதவி | சித்திரம் | தீட்டினாள் |
| 2 | இளங்கோவடிகள் | சிலப்பதிகாரத்தை | இயற்றினார் |
| 3 | அன்பழகன் | மிதிவண்டி | ஓட்டினான் |
| 4 | கிளி | பழம் | தின்றது |

SamacheerKalvi.Guide

## இ. எழுவாய், பயனிலை மட்டும் உள்ள தொடர்கள் மூன்று எழுதுக.

1. ..........................................
2. ..........................................

3. ..........................................

Answer:

- அமுதா திருக்குறள் படித்தாள்.
- முகிலன் கவிதை எழுதினான்.
- அன்பழகன் பேச்சுப்போட்டியில் பேசினான்.

## ஈ. பயனிலை, செயப்படுபொருள் மட்டும் உள்ள தொடர்கள் மூன்று எழுதுக.

1. ..........................................
2. ..........................................
3. ..........................................

Answer:

- ஆட்டம் ஆடினான்.
- வண்ண ம் தீட்டினாள்.
- கவிதை பொழிந்தான்.

## வினாக்களுக்கு விடையளி :

Question 1.
எழுவாய் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
Answer:
ஒரு தொடரில், யார், எது, எவை, யாவர் என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் ஆகும்.
எ.கா. தென்றல் நடனம் ஆடினாள். இதில் தென்றல் என்பது எழுவாய் ஆகும்.

Question 2.
செயப்படுபொருள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
Answer:
ஒரு தொடரில் யாரை, எதனை, எவற்றை என்னும்

வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள் ஆகும். எ.கா. தென்றல் நடனம் ஆடினாள். இதில் நடனம் என்பது செயப்படுபொருள் ஆகும்.

Question 3.
பயனிலை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
Answer:
ஒரு தொடரில் அமைந்துள்ள வினைமுற்று பயனிலை ஆகும். எ.கா. தென்றல் நடனம் ஆடினாள். இதில் ஆடினாள் என்பது பயனிலை ஆகும்.